செ.வெ.எண்: 61 நாள்: 22.02.2017

# பத்திரிகைச்செய்தி

## உணவுப் பாதுகாப்புத்துறையின் பதிவுச் சான்றிதழ் பெற பொது சேவை மையங்களை அணுகலாம் - மாவட்ட ஆட்சியர் திரு.சு.கணேக்ஷ் இ.ஆ.ப அறிவிப்பு.

உணவுப் பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006-ன் படி, ஒரு வருடத்திற்கு ரூ12,00,000Æ-ம் மற்றும் அதற்கு மேலும் விற்பனையளவு உள்ள உணவு வணிகர்கள் உணவுப்பாதுகாப்புத் துறையிடமிருந்து உரிமமும், அதற்கு கீழ் விற்பனையளவு உள்ள உணவு வணிகர்கள் உணவுபாதுகாப்புத் துறையிடம் இருந்து பதிவுச் சான்றிதலும் பெறுவது அவசியமாகும்.

தமிழக அரசின் உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை மற்றும் மத்திய அரசின் உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையம் ஆகியவை இணைந்து பதிவுச் சான்றிதழ் பெறுவதை எளிமையாக்கும் விதமாக பொது சேவை மையங்களில் விண்ணப்பித்து தற்காலிக பதிவுச் சான்றிதழ் பெறும் வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது.

அதன்படி, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பொது சேவை மையங்களில் இந்த வசதியைப் பயன்படுத்தி ரூ12,00,000Æ-க்கும் கீழ் வருடாந்திர விற்பனையளவு உள்ள உணவு வணிகர்கள், உணவு பாதுகாப்புத் துறையின் தற்காலிக பதிவுச் சான்றிதழ்களை ரூ.30Æ-யை சேவை கட்டணமாக செலுத்தி விண்ணப்பித்து பெறலாம். ஆய்வின் போது, விற்பனையளவுக் குறைத்து காண்பித்திருந்தாலோ அல்லது குறைந்தப்பட்ச உணவுப் பாதுகாப்பு விதிமுறைகள் பின்பற்றபடவில்லை என்றாலோ தங்களின் தற்காலிக பதிவுச் சான்றிதழ் உணவு பாதுகாப்புத் துறையினால் ரத்து செய்யப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகின்றது.

உணவு வணிகர்கள் தங்கள் பகுதிகளில் உள்ள பொது சேவை மையங்களின் முகவரியை அறிய gis.csc.gov.in/locator என்ற இயைத்தளத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

மேலும், 04.08.2016-க்கு பின்னர் மத்திய அரசு உணவுப் பாதுகாப்புத் துறையின் உரிமம் பெறுவதற்கு கால நீடிப்பு செய்யப்பட்டாததால், அனைத்து உணவு வணிகர்களும் உணவு பாதுகாப்புத் துறையின் உரிமம் பெற்று உணவு வணிகம் மேற்க்கொள்ள வேண்டும்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**